ஊர்தி நூல் நிலையங்கள்

* 251 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊர்தி நூல் நிலையங்கள் (Mobile Libraries) நமது ராஜ்யத்தில் எத்தனை உள்ளன, மாவட்டவாரியாக?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் 10 ஊர்தி நூல் நிலையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 9 கோயம்பத்தூர் மாவட்டத்திலும், ஒன்று மதுரை மாவட்டத்திலும் உள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஊர்தி நூல் நிலையங்கள் இல்லாத மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஊர்தி நூல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான உத்தேசம் அரசினருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங் களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது. கோயமுத்தூரில் இருக்கும் நூலகக் குழு மிகவும் முயற்சி செய்து ஒன்பது இயங்கும் நூலகங்களை அங்கே அமைத்திருக்கிறார்கள். மதுரையில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் இரண்டு வான்கள், பள்ளிக்கூடங்களுக்குச் சென்று புத்தகங்களைக் கொடுக்கும் அளவிற்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூருக்கு ஒரு வான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் வேலை இனிமேல்தான் தொடங்கும். எல்லா நூலகக் குழுத் தலைவர்களையும் அழைத்து, எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூலகங்களை வைக்க வேண்டும் என்ற முறையில் அரசு வற்புறுத்துவதாக இருக்கிறது.

Institute of Mathematical Sciences

* 252 Q.—THIRU A.M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) whether the State Government gives any grant to the Institute of Mathematical Research at Guindy; and

(b) if so, the amount of the grant per annum?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) சென்னை, அடையாற்றில் கணித விஞ்ஞான நிறுவனம் இருந்து வருகிறது.

(இ) 1962-63-லிருந்து 1966-67-வரை கணித விஞ்ஞான நிறுவனத்திற்குப் பின் வரும் மானியங்களை அரசு வழங்கி யுள்ளது.

ஆண்டு.	தொகை. ரூ.
1962–63	2,45,000
1963–64	2,27,900
1964–65	2,99,342
1965–66	3,08,662
1966–67	3,56,383